**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண். 247/2022**

2026–ம் வருடம் பிப்ரவரி திங்கள் 23–ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக வா.சா.2–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: நேரு கிருஷ்ணன்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை:–**

நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வா.சா.ஆ.6 ஆவணத்தை 06.12.2021 ஆம் தேதி துளசிதரன் என்பவர் அவர் சுயமாக எழுதினார். வா.சா.ஆ.6 ஆவணத்தில் கண்டுள்ள ஒவ்வொரு பக்கங்களிலும் துளசிதரனின் கையொப்பங்களும் கைரேகையும் கண்டுள்ளது. **அவை வா.சா.ஆ.14 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது. துளசிதரன் 7 கையொப்பங்களும், 7 கைரேகையும் செய்தள்ளார்.** வா.சா.ஆ.6 ஆவணத்தில் நான் முதலாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். **நான் 2 கையெழுத்துக்கள் செய்துள்ளேன். எனது கையொப்பங்கள் இவைதான். அவை வா.சா.ஆ.15 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது.** துளசிதரன் அந்த சமயத்தில் நல்ல மனநிலை உடல்நிலையில் இருந்தார். சுரேஷ் தவிர அவரது மனைவி, மகள் சுனிதா, மற்றொரு மகன் பரமேஷ்வரன், ஜனகன் ஆகியோருக்கும் மற்றும் உயில் எழுதிதருவதாக கூறினார்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வெங்கமேடு ஐயப்பன் கோவில் அருகில் உள்ள விவேகானந்தன் என்பவர் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து வா.சா.ஆ.6 எழுதப்பட்டது. சுமார் இரண்டரை மணி நேரம் அங்கு இருந்தோம். துளசிதரன் வாசகங்களை சொல்ல அங்கிருந்தவர் தட்டச்சு செய்தார். அந்த சமயத்தில் துளசிதரன் அசல் ஆவணங்கள் வங்கியில் இருப்பதால் நகல் ஆவணங்களை மட்டும் எடுத்து வந்தார். சாட்சியின் விலாசங்களை இரண்டாவது சாட்சி வடிவேல் என்பவர் எழுதினார். வாதி லட்சுமி எனக்கு பழக்கமானவர். வா.சா.ஆ.6 உயில் சாசனம் உங்கள் முன்பு தயார் செய்யப்படவில்லை என்றும் ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. துளசிதரன் கைப்பொமும், கைரேகையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 எழுதப்பட்டதாக சொல்லப்படும் சமயத்தில் துளசிதரன் நல்ல உடல்நிலையும், மனநிலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.23 18:23:11 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.